செய்தி வெளியீடு எண். 146 நாள்: 15.03.2018

# திருவள்ளுர் மாவட்டத்தில் இடைநிலை அரசுப் பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள்

இடைநிலை பொதுத் தேர்வுகள் (SSLC) 16.03.2018 முதல் 20.04.2018 வரையிலும் நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 24,249 ஆண்களும், 23,870 பெண்களும் ஆக மொத்தம் 48,119 தேர்வர்களும், தேர்வு எழுதவுள்ளனர். பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளியில் 14 மாணவர்களும், 7 மாணவிகளும் மற்றும் முகப்பேர், நேத்ரோதயா சிறப்பு பள்ளியை சேர்ந்த பார்வையற்ற 5 மாணவர்களும் தேர்வெழுதுகின்றனர். இத்தேர்வுகளுக்கு 159 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிறைவாசிகளின் வசதிக்காக புழல் மத்திய சிறையில் தனித்தேர்வர் மையம் ஒன்று அமைக்கப்பட்டு, இம்மையத்தில் 95 சிறைவாசிகள் தேர்வெழுதவுள்ளனர். மேலும், இடைநிலை பொதுத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 18 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திற்கும் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரும் மூத்த பட்டதாரி ஆசிரியர் ஒருவரும் நியமனம் செய்து ஆக மொத்தம் 36 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வினாத்தாட்கள் அனைத்தும் அரசுத்தேர்வுகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு அந்தந்த வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களில் வைக்கப்பட்டு ஆயுதம் ஏந்திய காவலர்கள் மேற்பார்வையில் பாதுகாப்பாக உள்ளது. ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் தேர்வர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாத்தாள்கள் போதுமான அளவு பெறப்பட்டுள்ளது.

தேர்வினை நன்முறையில் நடத்த திருவள்ளுர் மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் 23.02.2018 அன்று வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்து துறை, மின்வாரியத்துறை மற்றும் கல்வித்துறை அலுவலர்களுடன் மேல்நிலை, இடைநிலை அரசுப் பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்வுக்குழு கூட்டம் நடைபெற்றது.

மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 159 தேர்வு மையங்களுக்கும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாகவும், மூத்த பட்டதாரி ஆசிரியர்களை துறை அலுவலர்களாகவும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களின் எண்ணிக்கை 400-க்கும் அதிகமாக உள்ள மையங்களுக்கு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் துறை அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து தேர்வு மையங்களுக்கும் 20 தேர்வர்கள் கொண்ட ஓர் அறைக்கு ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2406 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களை தடுக்கும் பொருட்டு 50 பறக்கும் உறுப்பினர்களும், 310 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியர் அவர்களால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அலுவலர்கள் தேர்வு மையத்தினை திடீர்பார்வை மேற்கொள்வார்கள்.

வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை கொண்டு செல்ல 31 வழித்தடங்கள் அமைக்கப்பட்டு இவ்வழி தடங்களுக்கு 62 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வு மையங்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலரால் நியனம் செய்ப்பட்டுள்ள முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ' துறை அலுவலர்கள் ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ள தேர்வு மையங்களுக்கு சென்று தேவையான முன்னேற்பாடுகளை செய்து முடித்துள்ளனர். மேலும், தேர்வு மையங்களுக்கு தேவையான எழுதுபொருள்கள் அனைத்தும் போதுமான அளவு ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் பெறப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு தேர்வுகள் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவேண்டிய CENTRE NOMINAL ROLL, ATTENDANCE SHEET, HALL WISE SEATING PLAN AND COVER PLAN ஆகியவை பதிவிறக்கம் செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தேர்வு மையங்களுக்கு தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தடையற்ற மின்சாரம் வழங்க மின்சார வாரிய உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் சீரான போக்குவரத்து குறித்த நேரத்தில் இயக்குவதற்காக மாநகர் மற்றும் மண்டல போக்குவரத்து மேலாண் இயக்குநர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வு மையங்கள் அனைத்திலும் வகுப்பறைகளில் குழாய் விளக்குகள், மின்விசிறிகள் நல்லமுறையில் இயங்க ஏதுவாகவும், சுகாதாரமான குடிநீரை ஒவ்வொரு தேர்வு அறை முன்பாக குடங்களில் வைக்கவும், தேர்வு மைய வளாகம், கழிப்பறைகள் போன்றவை எந்நேரமும் தூய்மையாக வைத்திருக்கவும் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்வு நாளன்றும் வழித்தட அலுவலர்கள் மூலமாக வினாத்தாட்களை தேர்வு மையங்களுக்கு சென்று ஒப்படைக்கவும், தேர்வுகள் முடிந்தவுடன் விடைத்தாள்களை வழித்தட அலுவலர்கள் மூலமாக விடைத்தாள் சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்கவும் ஆயுதம் ஏந்திய காவலர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

தேர்வர்கள் தேர்வு எழுதும் போது தேர்வைறக்குள் அனுமதிக்கப்படாத ஆவணங்கள் மொபைல் போன், கால்குலேட்டர், வாட்ச், ஷு, பென்டிரைவர், பெல்ட் மற்றும் பர்ஸ் போன்றவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

அரசு பொதுத் தேர்வு சார்ந்து புகார்கள் ஏதேனும் இருப்பின் 1077 என்ற Toll Free எண்ணிற்கு தொடர்பு கொள்ள தெரிவிக்கப்படுகிறது. அரசுப் பொதுத் தேர்வுகள் செம்மையான முறையில் நடத்திட முன்னேற்பாடு நடவடிக்கைகள் அனைத்தும் சிறப்பான முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**